# விலைக் கேள்விக்கான கோரல்

## சபை நிதி - கட்டம் - I

# வலி வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லன்கலட்டி)

1. வலி வடக்கு பிரதேச சபை சார்பாக உள்ளூர் அதிகார சபை பெறுகைக் குழுவின் தலைவர் கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக் கேள்வியாளர்களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக் கேள்விகளைக் கோருகின்றார்கள்.
2. விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வி நடைமுறையின் மூலம் நடாத்தப்படும்.
3. விலைக் கேள்வியாளர்கள், நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (**CIDA**) பதிவு பெற்ற கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக் கேள்வி ஆவணத்தில் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் மேலதிக தகவல்கள் விலைக் கேள்வி ஆவணத்தில் **Schedule** (பகுதி 5) இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. (SBD -03)
5. அக்கறை கொண்டுள்ள விலைக் கேள்வியாளர்கள் கீழே **6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில்** மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன் அம் முகவரியில் மு.ப **9.00** மணியிலிருந்து பி.ப **3.00** மணிவரை அலுவலக நாட்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.
6. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை **செயலாளர், வலி வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை - கொல்லன்கலட்டி, (தொலைபேசி இல: 021-2241130, தொலை நகல் 021-2243688) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை 2024.01.31 – 2024.02.14 காலப்பகுதியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 2.00 மணி வரையில் சமர்ப்பித்து** ரூ.3000.00 மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் (மூலம்,பிரதி) **2024.02.14ம்** திகதி **14.30** மணிக்கு அல்லது அதற்கு முன்னர் **தலைவர், உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு, வலி வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லன்கலட்டி) எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும்**. காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.
8. விலைக் கேள்விகள், **2024.02.15** அன்று **மு.ப 10.00** மணிக்கு மேலேயுள்ள முகவரியில் சமூகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.
9. விலைக்கேள்விக்கு முன்னரான கூட்டம் மேலே 6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில் **பி.ப 2.30** மணிக்கு **2024.02.07** அன்று நடைபெறும்
10. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| இல | கேள்வி அடையாள இல | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை(ரூ.மில் | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் | | கேள்விப் பிணைவிபரம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | காலம் | திகதி | தொகை (ரூ) | தேவைப்படும் காலம் |
| 01 | NP/14/41(14)/05/02/291/CF-01/2024 | வீதி புனரமைத்தல் நாதோலை சனசமூக நிலைய முன்வீதி - இளவாளை வடமேற்கு | 0.490 | 60 நாட்கள் | C9 & C8 வீதி நிர்மானம் | 49 நாட்கள் | 02.04.2024 | 5,000.00 | Till 30.04.2024 |
| 02 | NP/14/41(14)/05/02/292/CF-02/2024 | வீதி புனரமைத்தல் கிராமசெயலக வீதி – தம்மளை, அளவெட்டி மேற்கு | 0.655 | 60 நாட்கள் | C9 & C8 வீதி நிர்மானம் | 49 நாட்கள் | 02.04.2024 | 7,000.00 | Till 30.04.2024 |
| 03 | NP/14/41(14)/05/02/293/CF-03/2024 | வீதி புனரமைத்தல் மாம்பிராய் வீதி - கட்டம் - II காங்கேசன்துறை மத்தி | 1.750 | 60 நாட்கள் | C9 & C8 வீதி நிர்மானம் | 49 நாட்கள் | 02.04.2024 | 18,000.00 | Till 30.04.2024 |
| 04 | NP/14/41(14)/05/02/294/CF-04/2024 | வீதி புனரமைத்தல் கலைச்செல்வி வீதி -கட்டம் - II தெல்லிப்பளை கிழக்கு | 2.585 | 60 நாட்கள் | C8 & C7 வீதி நிர்மானம் | 63 நாட்கள் | 16.04.2024 | 26,000.00 | Till 14.05.2024 |
| 05 | NP/14/41(14)/05/02/295/CF-05/2024 | மோட்டர் அறைகள் அமைத்தல்- மயிலிட்டி உப அலுவலகம், சீராவளை சேதனப்பசளை உற்பத்தி நிலையம் | 0.749 | 60 நாட்கள் | C9 & C8 கட்டட நிர்மானம் | 49 நாட்கள் | 02.04.2024 | 8,000.00 | Till 30.04.2024 |

**“விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும். இக் கொள்வனவின் மூலம் நடாத்தப்படும் வேலைக்கான மதிப்பீட்டுத்தொகை (VATமற்றும் வேறுவரிகள்) 50மில்லியனினுள் இருப்பின், பிராந்திய முன்னுரிமைமற்றும் CIDA தர முன்னுரிமை என்பன பொதுநிதிச் சுற்றறிக்கை இல 04/2016(iii) மற்றும் பின்னூட்டல் இல் குறிப்பிடப்பட்டவாறு பின்பற்றப்படும். அத்துடன் இக்கேள்வியின் போது 09.10.2020 மற்றும் 11.01.2021 ஆம் திகதிய பொதுநிதிச் சுற்றறிக்கை இல முறையே 03/2020 மற்றும் 03/2020(i) என்பனவும் பின்பற்றப்படும்.”**

**தலைவர்,**
**உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு**
**வலி வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை(கொல்லன்கலட்டி)**